දුරකථන
தொலைபேசி
Telephones
011-2136600
011-2136650

ලේකම්
செயலாளர்
Secretary
011-2136602

ෆැක්ස්
தொலைநகல்
Fax
011-2876169
011-2876181

විද්‍යුත් තැපෑල
மின் - அஞ்சல்
E - mail
info@psc.gov.lk

වෙබ් අඩවිය
இணையத்தளம்
Website
www.psc.gov.lk

රාජ්‍ය සේවා කොමිෂන් සභා කාර්යාලය
அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகம்
OFFICE OF THE PUBLIC SERVICE COMMISSION

අංක 1200/9, රජමල්වත්ත පාර, බත්තරමුල්ල
இல. 1200/9, இராஜமல்வத்தை வீதி, பத்தரமுல்லை
No. 1200/9, Rajamalwatta Road, Battaramulla

මගේ අංකය
எனது இல. PSC/APP/HB/31/2023
My No.

ඔබේ අංකය
உமது இல.
Your No.

දිනය
திகதி
Date 2023 ஒக்டோபர் மாதம் ஆம் திகதி

அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை இலக்கம் : 04/2023

அனைத்து அமைச்சுக்களினதும் செயலாளர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்கள்,

<u>இலங்கை நிர்வாக சேவையின், இலங்கை திட்டமிடல் சேவையின் மற்றும் இலங்கை கணக்காளர் சேவையின் தரம் I பதவிகளுக்கு நியமித்தல்</u>

பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 06/2006 இன் ஏற்பாடுகள் மற்றும் நாடளாவிய சேவைகளின் சேவை பிரமாணக்குறிப்புக்களில் குறிப்பிடப்பட்டுள்ள தடையற்ற தர உயர்வுகளை நடைமுறைப்படுத்துவதன் விளைவாகக் குறிப்பிட்ட சில நாடளாவிய சேவைகளின் தரம் I ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையானது ஒவ்வொரு சேவையிலும் அங்கீகரிக்கப்பட்ட தரம் I பதவிகளின் எண்ணிக்கையை விடவும் அதிகமாகவுள்ளது. அதற்கமைய, அரச உத்தியோகத்தர்களை விளைத்திறனாக மற்றும் வினைத்திறனாக சேவையில் ஈடுபடுத்துவதற்கு நாடளாவிய சேவைகளின் தரம் I பதவிகளுக்கு மிகப் பொருத்தமான உத்தியோகத்தர்களை அந்தத் தரத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்களிலிருந்து தெரிவு செய்வதன் பொருட்டு நியாயமான மற்றும் வெளிப்படைத் தன்மையுடனான நடைமுறையொன்றை வகுப்பதற்கு அரசாங்க சேவை ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

மேற்குறித்த ஏற்பாடுகளுக்கு அமைய இலங்கை நிர்வாக சேவை, இலங்கை திட்டமிடல் சேவை, இலங்கை கணக்காளர் சேவை போன்ற சேவைகளின் தரம் I பதவிகளுக்கு நியமிப்பதன் பொருட்டு பொருத்தமான உத்தியோகத்தர்களைத் தெரிவு செய்தலானது, 2023.10.16 ஆம் திகதி முதல் செயல்வலுப்பெறும் வகையில் இந்த சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு அமைவாக மேற்கொள்ளப்படும்.

02. விண்ணப்பங்கள் கோரல்

2.1 மேற்குறித்த நாடளாவிய சேவைகளின் தரம் I இற்குரிய பதவி வெற்றிடங்களுக்கு தரம் I இற்குப் பதவியுயர்த்தப்பட்ட உத்தியோகத்தர்களிடமிருந்தும் தரம் I பதவிக்கு நியமிக்கப்படாத உத்தியோகத்தர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. எதிர்வரும் வருடத்தில் ஏற்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு முந்தைய ஆண்டின் செப்டெம்பர் மாதம் 30 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டு விண்ணப்பங்கள் கோரப்படும்.

03. நேர்முகப் பரீட்சைக்கு அழைப்பு விடுப்பதன் பொருட்டு உத்தியோகத்தர்களைத் தெரிவு செய்தல்

3.1. தகைமைகளைப் பூர்த்தி செய்யும் விண்ணப்பதாரிகளுள், நிலவும் வெற்றிடங்களைப் போன்று இரண்டு மடங்கிற்குச் சமனான எண்ணிக்கையானவர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

3.2.விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கையானது நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கையைப் போன்று இரண்டு மடங்கிற்கும் அதிகமாகக் காணப்படுகின்ற சந்தர்ப்பங்களில் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் திறன் மற்றும் ஆற்றலை மதிப்பீடு செய்யும் முறைக்கு அமைய விண்ணப்பதாரிகள் தெரிவு செய்யப்படுவர்.

3.3.விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கையானது நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கையைப் போன்று இரண்டு மடங்கிற்கும் குறைவாகக் காணப்படுகின்ற சந்தர்ப்பங்களில் அனைத்து விண்ணப்பதாரிகளும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

3.4. விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கையானது நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கையை விடக் குறைவாகக் காணப்படுகின்ற சந்தர்ப்பங்களில் விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ள தரம் I ஐச் சேர்ந்த அனைத்து உத்தியோகத்தர்களும் உத்தியோகத்தர் குழாத்திற்கு நியமிக்கப்படுவர்.

குறிப்பு :

*இதனகத்துப் பின்னர் 'உத்தியோகத்தர் குழாம்' எனக் குறிப்பிடப்படுவது, இந்தச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்டு தெரிவு செய்யப்படும் உத்தியோகத்தர்களைக் கொண்டமைந்த குழுவாகும்.*

04. நேர்முகப் பரீட்சையை நடாத்துதல்

4.1. மேற்குறித்த 3.2 மற்றும் 3.3 பிரகாரம் தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவதுடன், நேர்முகப் பரீட்சையின் போது பின்வரும் பிரிவுகளின் கீழ் புள்ளிகள் வழங்கப்படும்.

| | துறை | உச்ச புள்ளிகள் |
|---|---|---|
| 01. | பிரதான திறன்கள் | 500 |
| 02. | அனுபவம் | 400 |
| 03. | மொழித் தேர்ச்சி | 100 |
| | மொத்தப் புள்ளிகள் | 1000 |

4.2. அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சை சபையொன்றினால் இணைப்பு 01 இல் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டல்களுக்கு அமையக் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும்.

05. நியமனத்திற்குத் தகைமை பெறும் விண்ணப்பதாரிகளின் (உத்தியோகத்தர் குழாம்) பட்டியலொன்றைத் தயாரித்தல்

5.1. கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் போது பெற்றுக் கொள்ளும் புள்ளிகளின் திறன் ஒழுங்கிற்கு அமைய வெற்றிட எண்ணிக்கை மற்றும் வெற்றிட எண்ணிக்கையில் 10% எனும் இரு எண்ணிக்கைகளினதும் கூட்டுத்தொகைக்கு சமனான உத்தியோகத்தர்களை உள்ளடக்கி நியமனம் செய்வதற்குத் தகைமை பெற்ற விண்ணப்பதாரிகளின் பட்டியலொன்று தயாரிக்கப்படும்.

06. பதவிக்கு நியமித்தல்

6.1. தற்போது தரம் I பதவியை வகிக்கும் உத்தியோகத்தர்களுள் பொருத்தமான உத்தியோகத்தர் ஒருவரைத் தெரிவு செய்யும் வாய்ப்பு ஏற்புடைய நிறுவனங்களின் நிறுவனத் தலைவர்களுக்கு வழங்கப்படும். உத்தியோகத்தர் குழாத்தைத் தாபிப்பதற்கு முன்னர் இந் நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்தல் வேண்டும்.

6.2. குழாத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட அனைத்து உத்தியோகத்தர்களும் வெற்றிடமாகவுள்ள அனைத்துப் பதவிகளுக்கும் தமது விருப்பத் தேர்வை ஒழுங்கு வரிசைப்படி குறிப்பிடல் வேண்டும். குறித்த உத்தியோகத்தர்களின் விருப்பத் தேர்வைக் கவனத்திற் கொண்டு அந்தந்த நிறுவனங்களில் நிலவும் பதவிகளுக்குக் குழாத்திலிருந்து பொருத்தமான உத்தியோகத்தர் ஒருவரைத் தெரிவு செய்யும் அதிகாரம் ஏற்புடைய நிறுவனத் தலைவர்களுக்கு உரித்துடையதாகும்.

6.3. குறித்தவொரு நிறுவனம் எதிர்பார்க்கும் வகையிலான தொழிநுட்பப் பின்னணியுடனான உத்தியோகத்தர் ஒருவர் உத்தியோகத்தர் குழாத்தில் இல்லை என எவரேனுமொரு நிறுவனத் தலைவருக்குத் தோன்றினால் அதன் பொருட்டு 'மேலதிக உத்தியோகத்தர் குழாத்தின்' உத்தியோகத்தர்கள் தொடர்பில் கவனம் செலுத்த முடியும் என்பதோடு, 'மேலதிக உத்தியோகத்தர் குழாத்திலும்' அத்தகைய உத்தியோகத்தர்கள் காணப்படாதவிடத்து அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் ஏற்புடைய நியமனத்தை மேற்கொள்வதன் பொருட்டு ஏனைய விண்ணப்பதாரிகள் குறித்து கவனம் செலுத்தப்படும்.

குறிப்பு :

*'மேலதிக உத்தியோகத்தர் குழாம்' எனக் குறிப்பிடப்படுவது, நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றிய போதும் உத்தியோகத்தர் குழாத்திற்குத் தெரிவு செய்யப்படாத உத்தியோகத்தர்களாவர்.*

07. ஏனைய ஏற்பாடுகள்

7.1. உத்தியோகத்தர் குழாத்திற்குத் தெரிவு செய்யப்படும் உத்தியோகத்தர்கள் தரம் I பதவிக்கு நியமிக்கப்படும் வரை காத்திருப்பதோடு, மீண்டும் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்ற வேண்டிய அவசியம் இல்லை.

7.2. உத்தியோகத்தர் குழாம் தாபிக்கப்பட்டதன் பின்னர் மேற்குறித்த சேவைகளின் தரம் I பதவிகளுக்குப் பதிற் கடமை அல்லது கடமைகளை மேற்கொள்ளும் அடிப்படையில் உத்தியோகத்தர்களை நியமிப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட மாட்டாது.

## 08. இடைக்கால ஏற்பாடுகள்

இந்த சுற்றறிக்கையின் இடைக்கால ஏற்பாடுகள் இந்த சுற்றறிக்கை வெளியிடப்படும் தினத்திலிருந்து செயல்வலுப்பெறும்.

### 8.1. இலங்கை திட்டமிடல் சேவை

எழுத்தாணை விண்ணப்பப்படிவ இலக்கம் 207/2020 தொடர்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் நீதிமன்ற நடவடிக்கைகள் பூர்த்தியாகும் வரை, இலங்கை திட்டமிடல் சேவையின் தரம் I இற்கு நியமனம் பெறுவதற்கான அனைத்துத் தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுவதுடன், மேற்குறித்த 4.1 மற்றும் 4.2 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு குறித்த அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும். நேர்முகப் பரீட்சையின் திறன் பட்டியலின் ஒழுங்கு வரிசை மற்றும் உத்தியோகத்தர்களின் விருப்பத் தேர்வைக் கவனத்திற் கொண்டு அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் தெரிவு செய்யப்படும் உத்தியோகத்தர்கள் பதிற் கடமை அடிப்படையில் நியமிக்கப்படுவர். மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்மானம் கிடைக்கும் வரை குறித்த அனைத்து நியமனங்களும் முழு நேர பதிற் கடமை அடிப்படையில் வழங்கப்படும்.

குறித்த பதிற் கடமை நியமனங்களை நிரந்தர நியமனங்களாக மாற்றுதல் குறித்து நீதிமன்ற நடவடிக்கைகள் பூர்த்தியானதன் பின்னர் தீர்மானிக்கப்படும்.

நேர்முகப் பரீட்சைகள் நடாத்தப்பட்டு, அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை 2/2022 பிரகாரம் பதிற் கடமை அடிப்படையில் பொருத்தமான உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்ட இலங்கை திட்டமிடல் சேவையின் தரம் I பதவிகளை, இந்தச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு அமைய வெற்றிடமான பதவிகளாகக் கருதுதலாகாது.

### 8.2 இலங்கை கணக்காளர் சேவை

சுற்றறிக்கை வெளியிடப்படும் திகதியன்று தரம் I பதவியை வகிக்காத, இலங்கை கணக்காளர் சேவையின் தரம் I ஐச் சேர்ந்த அனைத்து உத்தியோகத்தர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுவதுடன், மேற்குறித்த 4.1 மற்றும் 4.2 பிரகாரம் குறித்த அனைத்து உத்தியோகத்தர்களும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். நேர்முகப் பரீட்சையின் திறன் பட்டியலின் ஒழுங்கு வரிசை மற்றும் உத்தியோகத்தர்களின் விருப்பத் தேர்வைக் கவனத்திற் கொண்டு அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் தெரிவு செய்யப்படும் உத்தியோகத்தர்கள் 2024 டிசம்பர் 31 ஆம் திகதி வரை வெற்றிடமாக உள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவர்.

### 8.3. இலங்கை நிர்வாக சேவை

இலங்கை நிர்வாக சேவையின் தரம் I இற்கான வெற்றிட எண்ணிக்கையானது தரம் I உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையை விட அதிகம் என்பதால் தரம் I பதவியில் பதிற் கடமை அடிப்படையில் சேவையாற்றும் தரம் I ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்களின் நியமனத்தைக் குறித்த பதவியிலேயே நிரந்தரமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

2024.07.01 ஆம் திகதி வரை தரம் I இற்குப் பதவியுயர்வு பெற வேண்டிய அனைத்து உத்தியோகத்தர்களும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவதோடு, நேர்முகப் பரீட்சையின் திறன் பட்டியலின் ஒழுங்கு வரிசை மற்றும் அவர்களது விருப்பத் தேர்வின் அடிப்படையில் தரம் I இற்குத் தெரிவு செயயப்படுவர்.

8.4. <u>வேறு</u>

அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை 2/2022 இற்கு அமைவாக வெற்றிடங்களை நிரப்புவதற்கான நேர்முகப் பரீட்சைக்குத் தற்போது விண்ணப்பங்கள் கோரப்பட்டிருப்பின், குறித்த பதவிகளுக்கு அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை 2/2022 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் நியமனங்கள் மேற்கொள்ளப்படும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பணிப்பிற்கமைய,

டப்ளியூ.எச்.எம்.எம்.சீ.கே.தயாரத்ன
செயலாளர்
அரசாங்க சேவை ஆணைக்குழு

இணைப்பு 01

**புள்ளி வழங்கும் திட்டம்**

| தலைப்பு | உச்சப் புள்ளிகள் |
|---|---|
| 01. பிரதான திறன்கள் | 500 |
| 02. அனுபவம் | 400 |
| 03. மொழித் தேர்ச்சி | 100 |
| மொத்தப் புள்ளிகள் | 1000 |

01. உத்தியோகத்தரிடமிருந்து எதிர்பார்க்கப்படும் பிரதான திறன்கள் - 500

பிரதான திறன்களை மதிப்பிடுதல் - விளைத்திறனான முறையில் தீர்மானமெடுத்தல்

மாதிரி நேர்முகப் பரீட்சை வினா – தங்களுக்கு சிக்கலான ஒரு பிரச்சினைக்குத் தீர்வு வழங்க நேரிட்ட சந்தர்ப்பமொன்றை விபரிக்க.

விடையளிக்கும் முறை - சூழல் (Context) செயல் (Action) மற்றும் பெறுபேறு (Result) அதாவது : CAR முறை அல்லது சந்தர்ப்பம் (Situation), பணி (Task), செயல் (Action) மற்றும் பெறுபேறு (Result) அதாவது : STAR முறையைப் பயன்படுத்தி இவ்வாறான சிக்கல்களுக்குப் பதிலளிப்பதற்கு விண்ணப்பதாரிக்கு வழிகாட்டப்படும்.

நேர்மறையான சான்றுகள் - நிலவும் அனைத்து சந்தர்ப்பங்கள், ஆபத்து மற்றும் ஏற்படக் கூடிய பாதிப்புக்கள் கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளன. ஆபத்து மற்றும் எதிர்மறையான தாக்கங்களைக் குறைப்பதற்கான மற்றும் முகாமைத்துவம் செய்வதற்கான திட்டம் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

எதிர்மறையான சான்றுகள் - ஆபத்து, சந்தர்ப்பங்கள் மற்றும் மாற்று வழிகள் குறித்து முழு அவதானம் செலுத்தப்படாது பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

விடை குறித்த நேர்முகப் பரீட்சை சபையின் பகுப்பாய்வு – விண்ணப்பதாரியின் பிரதான திறன் பின்வரும் வழிகாட்டல்களின் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்படும். மூன்று வினாக்களுக்குக் குறையாமல் மற்றும் ஆறு வினாக்களுக்கு மேற்படாமல் கேட்கப்படல் வேண்டும்.

அட்டவணை A

| | |
|---|---|
| உயர் மட்டத்திலான திறன் குறித்த நேர்மறையான பண்புகளை வெளிக்காட்டுவதுடன், குறிப்பிடத்தக்க மட்டத்திலான எதிர்மறைப் பண்புகள் இல்லை. | 5 |
| திறன் குறித்த நேர்மறையான பண்புகளை வெளிக்காட்டுவதுடன், ஓரளவு எதிர்மறைப் பண்புகள் வெளிப்படுத்தப்பட்டன. | 4 |
| திறன் குறித்த நேர்மறையான பண்புகள் மற்றும் எதிர்மறையான பண்புகள் சமனான மட்டத்தில் காணப்படுகின்றன. | 3 |
| திறன் குறித்த ஓரளவு நேர்மறையான பண்புகள் காணப்படுவதுடன், குறிப்பிடத்தக்க அளவு எதிர்மறைப் பண்புகளும் காணப்படுகின்றன. | 2 |
| திறன் குறித்த நேர்மறையான பண்புகள் மிகக் குறைவு அல்லது நேர்மறையான பண்புகள் இல்லை என்பதுடன், எதிர்மறைப் பண்புகள் உயர் மட்டத்தில் காணப்படுகின்றன. | 1 |

02. அனுபவத்தை மதிப்பீடு செய்தல் - 400

- பல்வேறு பதவிகளை வகித்ததன் மூலம் பெற்றுக் கொண்டுள்ள அனுபவத்திற்குப் புள்ளிகள் வழங்கப்படும். (175 புள்ளிகள்)
- அமைச்சுக்கள்/திணைக்களங்கள்/ஆணைக்குழுக்கள்
- மாவட்ட செயலகங்கள்/பிரதேச செயலகங்கள்/வரிசை அமைச்சின் பிராந்திய அலுவலகங்கள்/திணைக்களங்களின் பிராந்திய அலுவலகங்கள்
- மாகாண சபைகள்

வருடமொன்றிற்கு 15 புள்ளிகள் வீதம் வழங்கப்படுவதுடன், மேற்குறித்த ஒரு வகுதிக்கு வழங்கப்படும் உச்சப் புள்ளிகள் 120 ஆகும்.

- அனுபவம் தொடர்பில் கேட்கப்படும் வினாக்களுக்கு வழங்கப்படும் விடைகளின் அடிப்படையில் ஒவ்வொரு பதவியிலும் பெற்றுக் கொண்டுள்ள திறன் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது – 225 புள்ளிகள்
  (பதவியொன்றில் சேவையாற்றிய வருடங்களுக்கு மேலதிகமாக)
- திறன் குறித்த வினாக்களுக்கு வழங்கப்படும் விடைகளின் அடிப்படையில் ஒவ்வொரு பதவிகளை வகித்ததன் மூலம் பெற்றுக் கொண்ட திறனை மதிப்பிட முடியும். குறித்த பகுதி மூலம் உள்ளடக்கப்படாத ஏதேனும் ஒரு பணி இருப்பின் அனுபவம் குறித்த வினாக்கள் ஊடாக அதனை மதிப்பிட முடியும்.

உ-ம் - தாங்கள், ...................................... ஆக சேவையில் ஈடுபட்டிருந்த போது தாங்கள் பெற்றுக் கொண்ட குறிப்பிடத்தக்க சாதனை குறித்து விபரிக்க.

அனுபவம் - உத்தேச புள்ளி வழங்கல் முறை

| | |
|---|---|
| பல்வேறு பதவிகளில் சேவையாற்றியுள்ளார். குறித்த எல்லாப் பதவிகளிலும் விசேட தேர்ச்சியைப் பெற்றுள்ளமைக்கான போதிய சான்றுகள் உள்ளன. | 225 |
| பல்வேறு பதவிகளில் சேவையாற்றியுள்ளார். குறித்த பதவிகளுள் சில பதவிகளில் விசேட தேர்ச்சியைப் பெற்றுள்ளமைக்கான சான்றுகள் உள்ளன. | 150 |
| பல்வேறு பதவிகளில் சேவையாற்றியுள்ள போதும் குறித்த எந்த பதவியிலும் விசேட தேர்ச்சியைப் பெற்றுள்ளமைக்கான சான்றுகள் இல்லை. | 75 |

03. மொழித் தேர்ச்சி – 100

- திறன்களை மதிப்பீடு செய்கையில், ஏற்புடைய மொழியில் வினாக்களைக் கேட்பதன் மூலம் விண்ணப்பதாரிகளின் மற்றைய அரசகரும மொழி/ஆங்கில மொழித் தேர்ச்சியானது நேர்முகப் பரீட்சை சபையினால் மதிப்பிடப்படும்.
    - மற்றைய அரசகரும மொழி – 50 புள்ளிகள்
    - ஆங்கில மொழி - 50 புள்ளிகள்

தரப்படுத்தல் முறை

| C மட்டம் - 10 புள்ளிகள் | B மட்டம் - 25 புள்ளிகள் | A மட்டம் - 50 புள்ளிகள |
|---|---|---|
| இடைவெளிகள் மற்றும் தவறான ஆரம்பங்களை மிகத் தெளிவாகக் காணக் கூடியதாக இருந்தாலும் ஒரு சிறு முயற்சி மூலம் தம்மைத் தாமே புரிந்து கொள்ளல் | குறித்துரைக்கப்பட்ட ஒரு தலைப்பு குறித்து எளிய விளக்கமளித்தல் | சிக்கலான தலைப்புக்கள் குறித்து தெளிவான, விரிவான விளக்கமளித்தல் |
| வழக்கமான செயற்பாடுகளின் (Routine Activities) நாளாந்த அம்சங்கள் குறித்து உரையாடுவார் | பிரதான விடயங்களை விரிவாக விபரிப்பார் | கலந்துரையாடலொன்றை சாராம்சப்படுத்துவார் |
| எளிய வினா விடை பரிமாற்றத்தை மேற்கொள்ள முடியும். | சிக்கலான நிலைமைகள் தோன்றும் போது மாற்று வழிகளை ஒப்பிட்டுக் கலந்துரையாடுவார் | கருத்தை வெளிப்படுத்தி அதைத் தொடர்ச்சியாகப் பேணுவார் |

| | | |
|---|---|---|
| பரிச்சயமான சந்தர்ப்பங்கள் மற்றும் தலைப்புக்கள் தொடர்பில் பொதுவான நாளாந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குப் போதுமான அடிப்படை சொற்களஞ்சியம் மற்றும் இலக்கண அறிவு காணப்படுகிறது. | நீண்ட நேரம் உரையாடுகையில் இலக்கணம் மற்றும் சொற்களைத் தெரிவு செய்வதற்கு இடைவெளிகளை எடுத்துக் கொண்டு அவற்றைத் தயார்படுத்தும் சந்தர்ப்பங்கள் காணப்பட்ட போதிலும் இயல்பாக உரையாடுவார். | சிக்கலான மற்றும் அனுமான வினாக்களுக்கு பதிலளிப்பார். |
| செய்தியின் தெளிவிற்குத் தடை ஏற்படும் வகையில் வேறு ஒரு மொழியின் வடிவத்தையும் சொற்களையும் பயன்படுத்துவார். | விசேடமான, அசாதாரண நிலைமைகளை மற்றும் தலைப்புக்களைக் கையாள்வதற்குப் போதுமான சொற்களஞ்சியம் மற்றும் எளிய இலக்கண அமைப்பு காணப்படுவதுடன், ஒழுங்கற்ற முறையில் காணப்படும் விளக்கமொன்றை (Factual Description) முன்வைக்கையில் எளிய வாக்கியத் தொடர்களை ஒழுங்குவரிசைப்படி தொடர்புபடுத்தி முன்வைக்க முடியும். | ஓரளவு இயல்பாகவும் சீரான முறையிலும் உரையாட முடியும். அவ்வப்போது நிறுத்தங்கள் காணப்பட்ட போதும் அவை குறித்த கருத்துக்களைத் தொகுப்பதன் பொருட்டாகும். |
| செவிமடுப்பவர் மிக உன்னிப்பாக அவதானிக்க வேண்டிய வகையிலான உச்சரிப்புப் பாணி காணப்பட்ட போதிலும் செவிமடுப்பவருக்குத் தெளிவற்ற வகையில் சொற்களுக்கு இடையே நீண்ட இடைவெளி இல்லை. | சில சந்தர்ப்பங்களில் தவறான தொடர்பாடல் இடம்பெற முடியும் எனினும் சொற்களுக்கிடையிலான நீண்ட இடைவெளி பெரும்பாலும் தெளிவானதாகும். | சிக்கலான மற்றும் சுருக்கமான (Complex & Abstract) தலைப்புக்கள் தொடர்பில் உரையாடுகையில் பரந்த சொற்களஞ்சியங்கள் மற்றும் இலக்கணக் கட்டமைப்பைப் பயன்படுத்துவதோடு, ஒப்பீட்டளவில் உயர் மட்டக் கட்டுப்பாட்டைக் கொண்டுள்ளார். |
| | உச்சரிப்பின் போது வேறு ஒரு மொழியின் தாக்கத்தை வெளிப்படுத்தினாலும் பொதுவாகப் புரிந்து கொள்ளக் கூடிய அளவிலான தெளிவான | தவறுகள் இடம்பெற்றாலும் அவை தவறான புரிதல்களை ஏற்படுத்தும் அளவிலானவை அல்ல.<br><br>தெளிவான உச்சரிப்புக் |

| | | |
|---|---|---|
| | உச்சரிப்பைக் கொண்டுள்ளார்.<br><br>சில சந்தர்ப்பங்களில் மீண்டும் கூறுமாறு அல்லது தெளிவுபடுத்துமாறு செவிமடுப்பவருக்குக் கோர நேரிடலாம். | காணப்பட்ட போதிலும் உச்சரிப்பின் போது வேறு ஒரு மொழியின் உச்சரிப்புப் பாணி வெளிப்படுகிறது.<br><br>அவ்வப்போது தவறான உச்சரிப்புக்களை வெளிப்படுத்திய போதும் அவை மிக அரிதாகவே தொடர்பாடலுக்குத் தடையாக அமைகின்றன. |